# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8108548

1. District : சிவகங்கை | PS: V&AC சிவகங்கை | Year: 2021 | FIR No.: 05/2021 | Date: 01.10.2021
மாவட்டம் | காவல்நிலையம் | ஆண்டு | மு.த.அ. எண் | நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act — Sections பிரிவுகள்: 7 of PC Act 1988
(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: [as amended in] Act
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: 16 of 2018
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 30.09.2021 — Date to : நாள் வரை
Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 14.00hrs — Time to : நேரம் வரை 22.00hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.10.2021 — Time : நேரம் 07.00hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — By written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் 1 km South East
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address முகவரி O/o the District Rural Development Agency Sivagangai.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. [illegible]
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — (d) Nationality : நாட்டினம் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் [illegible] சிவகங்கை — (g) Address : முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1.[illegible] கு.சிவராணி, செயற்பொறியாளர், பொறுப்பு திட்ட அலுவலர், மாவட்ட ஊராக வளர்ச்சி முகமை, சிவகங்கை.
2.திரு.சண்முகசுந்தரம், உதவி செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி), சிவகங்கை சாலைகள் (ம) பாலங்கள் உபகோட்டம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, சிவகங்கை, சிவகங்கை மாவட்டம்.
3.திரு.நீலமேகம், உதவி செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி), தேவகோட்டை சாலைகள் (ம) பாலங்கள் உபகோட்டம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, சிவகங்கை, சிவகங்கை மாவட்டம்.
4.திரு.நா.அருணகிரி, இளநிலை வரை தொழில் அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, சிவகங்கை, சிவகங்கை மாவட்டம்.
5.திரு.ராஜசேகர், கணினி உதவியாளர் மற்றும் திட்ட அலுவலருக்கான தனி உதவியாளர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, சிவகங்கை, சிவகங்கை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

**No Delay**

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / Involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்பிக்கிறேன்:- இன்று 01.10.2021 ஆம் தேதி காலை 07.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது, சிவகங்கை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரான திரு.S.பாலகுரு அவர்கள் அலுவலகத்தில் ஆஜராகி, 30.09.2021 ஆம் தேதி, சிவகங்கை மாவட்டம், சிவகங்கை நகர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில் நடந்திய இணை திடீர் சோதனை சம்பந்தமான செயல்முறை நடவடிக்கைகள், 30.09.2021 ஆம் தேதி பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள், கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.3,31,000/- மற்றும் கைப்பற்றப்பட்ட ஆவணங்களுடன் கொடுத்த எழுத்து மூலமான புகாரைப்பெற்று, சிவகங்கை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.08/2021, U/s. 7 of Prevention of Corruption Act 1988 (as amended in) Act 16 of 2018-ன்படி வழக்கு பதிவு செய்தேன். வாதி புகார் பின்வருமாறு:- அனுப்புனர் திரு.S.பாலகுரு, துணை

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ...மணிமொழி... பதவி ..D.S.P.......... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

1/10/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ..........................
Rank: நிலை ..................No. எண் ..........

01.10.2021.

ஆய்வுக்குழு அலுவலர், சிவகங்கை மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சிவகங்கை. நாள்.01.10.2021 ஐயா, பொருள்: இணை திடீர் சோதனை – சிவகங்கை மாவட்டம், மாவட் ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில் 30.09.2021 அன்று திடீர் இணை சோதனை நடத்தப்பட்டது – மேல் நடவடிக்கை எடுக்க கோருவது தொடர்பாக. பார்வை: எனது செயல்முறை நடவடிக்கைகள், நாள்.30.09.2021. ********* கடந்த 30.09.2021-ம் தேதி சிவகங்கை மாவட்டம், துணை ஆய்வுக்குழு அலுவலரான என்னை அழைத்தன் பேரில், நான், துணை ஆய்வுக்குழு உறுப்பினர் திரு.R.பிரபாகரன் என்பவருடன் பிற்பகல் 13.30 மணியளவில் தங்கள் அலுவலகம் வந்து தங்களை சந்தித்தேன். சிவகங்கை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில் பசுமை வீடுகள் திட்டத்தில் வீடு கட்டுதல் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்குதல் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிதி விடுவித்தல், Prime Minister Gramin Sadak Yojana (PMGSY), Tamilnadu Rural Roads Infrastructure Development Scheme (TNRRIS), மாநில நிதிக்குழு திட்டங்களில் சாலைகள் அமைத்தல் பணிகளுக்கு டெண்டர் விடுதல், மேற்பார்வையிடுதல், ஒப்பந்ததாரருக்கு தொகை விடுவிக்க மாவட்ட ஆட்சியருக்கு அனுமதி கோரி கோப்பு அனுப்புதல் உள்ளிட்ட பணிகளில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை (1) செயற்பொறியாளர், (கூடுதல் பொறுப்பு) இணை இயக்குநர்/திட்ட இயக்குநர், (2) உதவி செயற்பொறியாளர் (சாலைகள் மற்றும் பாலங்கள்) ஆகியோர் ஒப்பந்ததாரர்களிடம் லஞ்சம் கேட்டுப்பெறுவதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் இன்று 30.09.2021ம் தேதி 14.00 மணிக்கு முதல் தளத்தில் அமைந்துள்ள சிவகங்கை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில் திடீர் இணைச்சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி அலுவலகமானது தெற்கு பார்த்த நுழைவு வாயிலுடன் 2 தளங்களுடன் அமைந்துள்ளது. தரைத்தளத்தில் கிழக்குபுறத்தில் மகளிர் திட்ட அலுவலகம், வடக்கு பகுதியில் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகம், மேற்கு பகுதியில் உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகம் அமைந்துள்ளது. முதல் தளத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அமைந்துள்ளது. முதல் தளத்தின் தென்கிழக்கு பகுதியில் இணை இயக்குநர்/திட்ட இயக்குநர் அறையும், அந்த அறையில் வடக்கு பகுதியில் Personal Clerk of JD/PD அறையும், முதல் தளத்தில் தென்மேற்கு பகுதியில் செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) அறையும், செயற்பொறியாளர் அறைக்கு கிழக்கு பகுதியில் Engineering Wing- அறையும் அமைந்துள்ளது. முதல் தளத்தின் செயற்பொறியாளர் அறைக்கு வடக்கு பகுதியில் உதவி செயற்பொறியாளர்கள் (சாலைகள் மற்றும் பாலங்கள்) அறையும் அமைந்துள்ளது. இந்த திடீர் இணைச்சோதனையின்போது மேற்படி அலுவலகத்தில் திரு.R.சண்முகசுந்தரம், உதவி செயற்பொறியாளர் (ஊ.வ), சாலைகள் (ம) பாலங்கள் சிவகங்கை உபகோட்டம், திரு.P.நீலமேகம், உதவி செயற்பொறியாளர் (ஊ.வ) சாலைகள் (ம) பாலங்கள், தேவகோட்டை உபகோட்டம மற்றும் அலுவலர்கள் ஆஜரில் இருந்தார்கள். மேற்படி அலுவலகத்தில் உதவி செயற்பொறியாளர் (சாலைகள் மற்றும் பாலங்கள்) அறையின் தென் கிழக்கு பகுதியில் வடக்கு பார்த்து இருக்கையில் அமர்ந்திருந்த திரு.R.சண்முகசுந்தரம், உதவி செயற்பொறியாளர் (ஊ.வ), சாலைகள் (ம) பாலங்கள்,

சிவகங்கை உபகோட்டம் என்பவரை சோதனையிட்டபோது அவரது இடதுபக்க பேண்ட் பாக்கெட்டில் கத்தையாக பணம் ரூ.40,000/– (ரூ.500/– X 80)ம் அவரது மணி பர்சில் ரூ.4910/–ம் இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்க குழந்தைகளுக்கு கல்வி கட்டணம் கட்டுவதற்காக கொண்டு வந்த பணம் என்று தெரிவித்தார். அவரது மணி பர்சில் இருந்த பணம் ரூ.4910/– அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவர் கத்தையாக வைத்திருந்த பணம் ரூ.40,000/– குறித்து சரியான முகாந்திரம் கூறாததால் அந்தப்பணம் ரூ.**40,000/–** அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. Engineering Wing- அறையில் கணிணி மேஜை முன்பிருந்த இருக்கையில் திரு.P.நீலமேகம், உதவி செயற்பொறியாளர் (ஊ.வ) சாலைகள் (ம) பாலங்கள், தேவகோட்டை உபகோட்டம் அவர்கள் கணிணி தட்டச்சர் திரு.முத்துக்கிருஷ்ணன் என்பவர் மூலம் கணிணியில் அலுவல் பணி செய்துகொண்டிருந்தார். அவரை சோதனை செய்தபோது அவரது வலதுபக்க பேண்ட் பாக்கெட்டில் ரூ.640/– இருந்தது. அந்தப்பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்க அவர் கை செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் என்று கூறியதால் அந்தப்பணம் ரூ.640/– அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவரது மணி பர்சில் கத்தையாக பணம் ரூ.22,000/– (ரூ.500/– X 44) இருந்தது. அந்தப்பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்க அவர் சரியான முகாந்திரம் கூறாததால் அந்தப்பணம் ரூ.**22,000/-** அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. பின்னர் அவரது இருக்கை குறித்து கேட்டபோது, அவர் உதவி செயற்பொறியாளர்கள் (சாலைகள் மற்றும் பாலங்கள்) அறைக்கு வந்து, அந்த அறையின் தென்மேற்கு பகுதியில் வடக்கு பார்த்து இருந்த அவரது இருக்கையை காண்பித்தார். அவரது இருக்கையை சோதனை செய்தபோது அவரது இருக்கைக்கு முன்பிருந்த மேஜைக்கு கீழே உள்ள ட்ராவுக்கு அருகில் மேஜையுடன் இணைந்துள்ள பென்சில் பாக்சில் ரூ.50,000/– என பென்சிலால் எழுதப்பட்டிருந்த காக்கி கவரினுள் கத்தையாக பணம் ரூ.50,000/– (ரூ.500/– X 100) இருந்தது. அந்தப்பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது அதுபற்றி அவருக்கு தெரியவில்லை என்று கூறியதால் அந்தப்பணம் ரூ.**50,000/-** மற்றும் பணம் வைக்கப்பட்டிருந்த காக்கி கவர் ஆகியவற்றை கைப்பற்றப்பட்டது. மேற்படி அலுவலகத்தில், Personal Clerk of JD/PD அறையில் இருந்த திரு.K.ராஜசேகர், த/பெ.கிருஷ்ணன் என்பவரை விசாரணை செய்தபோது, அவர் மேற்படி அலுவலகத்தில் கடந்த 2012ம் ஆண்டு முதல் தொகுப்பூதிய அடிப்படையில் கணிணி இயக்குபவராக வேலை செய்து வருவதாகவும், 2018ம் ஆண்டு Personal Clerk பொறுப்பை கூடுதலாக கவனித்து வருவதாகவும் தெரிவித்தார். அவரை சோதனையிட, அவரது வலதுபக்க பேண்ட் பாக்கெட்டில் கத்தையாக ரூ.50,000/– (ரூ.500/– X 100) இருந்தது. அந்தப்பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, மேற்படி பணத்தினை இன்று காலை 11.00 மணியளவில் பசுமை வீட்டிற்கான சோலார் பேனல் வைத்து கொடுக்கும் பணி செய்துவரும் பெயர் தெரியாத சென்னையைச் சேர்ந்தவர் கமிஷன் தொகையை கொடுத்து சென்றதாக தெரிவித்தார். ஆகவே, மேற்படி பணம் ரூ.**50,000/-** அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. அவருடைய டேபிள் ட்ராவினுள் இருந்த காக்கி கலர் போல்டர் பேக்கில் தமிழரசன் NABARD 39 என கோடு போடப்பட்ட பேப்பரில் ரூ.39,000/– (ரூ.500/– X 78) இருந்தது. அந்தப்பணம்

குறித்து அவரிடம் விளக்கம் கேட்க மேற்படி பணத்தினை இளையான்குடியை சேர்ந்த தமிழரசன் NABARD Contract பணிக்கு செயற்பொறியாளர் திருமதி.சிவராணி அவர்களுக்காக என்னிடம் கொடுத்து சென்றார். ஆகவே மேற்படி பணம் ரூ.**39,000/-** மற்றும் மேற்படி கோடு போடப்பட்ட பேப்பர் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. அந்த பேக்கினுள் ஒரு வெள்ளைப் பேப்பரில் திருப்பத்தூர 14th Fin Road அ.வேலங்குடி ரூ.12,23,153/-, காட்டாம்பூர் ரூ.13,10,916/-, அ.தெக்கூர் ரூ.15,49,886/- மொத்தம் ரூ.40,839/- என்றும் பேப்பரின் கீழே S.V.Perumal என்றும், அதன் கீழே ரூ.40,000/- என எழுதி வட்டமிட்டு காட்டப்பட்டிருந்தது. மேற்கண்ட பணத்தினை மூன்று பணிகளை எடுத்து செய்து வரும் S.V.பெருமாள் காண்ட்ராக்டர் மொத்த தொகை ரூ.40,83,955/-ல் EE-க்கு 1 % கமிஷன் தொகையான ரூ.40839/-ல் ரூ.40,000/- (ரூ.500/- X 80)ஐ EE-க்கு கொடுப்பதற்காக மேற்படி S.V.பெருமாளிடம் பெற்று வைத்திருந்தேன். ஆகவே, மேற்படி பணம் ரூ.**40,000/-** மற்றும் மேற்படி வெள்ளை பேப்பர் ஆகியவை அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. மேற்படி பேக்கினுள் TNRRIS-19-20 ஒத்தப்பட்டு சாலை முதல் மேலப்பட்டமங்கலம் 20,000/ என அவர் ஒரு பேப்பரில் எழுதி சுற்றி வைத்திருந்தார். அந்தப்பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, காளையார்கோவில் மாரி, காண்ட்ராக்டர் EE-க்கு கமிஷனாக கொடுத்த பணம் என்று கூறினார். ஆகவே, மேற்படி பணம் ரூ.**20,000/-** மற்றும் மேற்படி வெள்ளைப்பேப்பர் கைப்பற்றப்பட்டது. அதேபோல் இரண்டு பேப்பரில் ஒன்றில் TNRRIS Scheme பணி எடுத்து செய்து வரும் காண்ட்ராக்டர் சிவக்குமார் அவர்களின் தந்தையும் வாத்தியாருமான காண்ட்ராக்டர் ரூ.19,000/- (ரூ.500/- X 38)ஐ EE-க்கு கொடுப்பதற்காக அவர் கொடுத்ததை வாங்கி வைத்திருந்தாக கூறினார். அதேபோல் TNRRIS பணிக்காக திருப்பத்தூர் காண்ட்ராக்டர் வடிவேல் அவர்கள் ரூ.25,000/-ஐ EE-க்கு கொடுப்பதற்காக கொடுத்த பணம் ரூ.25,000/- இரண்டையும் சேர்த்து ரூ.44,000/-ஐ வெள்ளை பேப்பரில் 19-வாத்தியார், TNRRIS 25-TNRRIS வடிவேல் என அவர் எழுதி ரப்பர் பேண்ட் போட்டு சுத்தி வைத்திருந்தார். அந்தப்பணம் ரூ.**44,000/-** மற்றும் மேற்படி 2 பேப்பர்களுடன் கைப்பற்றப்பட்டது. அத்துடன் காக்கி கலர் பேக்கில் ரூ.17,000/- (ரூ.500/- X 34) ரப்பர் பேண்ட் போட்டு சுற்றி வைக்கப்பட்டிருந்தது. அந்தப்பணத்தை பற்றி அவரிடம் கேட்டபோது, அந்தப்பணம் சாக்கோட்டையைச் சேர்ந்த ஸ்ரீதர் காண்ட்ராக்டர் EE-க்கு கமிஷனாக கொடுத்த பணம் என்று கூறினார். ஆகவே, மேற்படி பணம் ரூ.**17,000/-** அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. அதே பேக்கில் சிவப்பு கலர் கொண்ட Venus Note book-ல் No.5 என குறிப்பிட்டு 18.09.2021 என தேதியிட்டு அதன் கீழே NABARD தமிழரசன் என்று எழுதப்பட்டு அதில் ரூ.39,16,284 (39,000) எழுதப்பட்டதற்கு கீழே இறுதியாக ரூ.1,73,000/- என எழுதப்பட்டு அது சரி பாதியாக 86,500, 86,500 என எழுதி வைத்திருந்தார். பொதுவாக காண்ட்ராக்டர் தரும் பணத்தினை EE-க்கும் PD-க்கும் சரி சமமாக பங்கிட்டு வழங்க வேண்டும் என்பதால் அவ்வாறு பிரித்து காண்பித்துள்ளதாக தெரிவித்தார். தற்போது PD பணியிடம் காலியாக உள்ளதால் PD-க்கு கொடுக்க வேண்டிய கமிசன் தொகையை EE-திருமதி.சிவராணிக்கு கொடுத்துவிடுவேன் எனவும், மேற்கண்ட பணத்தினை EE

திருமதி.சிவராணி கேட்கும்போது கொடுப்பதற்காக மேற்கண்ட பணங்களில் காண்ட்ராக்டர்களின் பெயர்களை எழுதி வைத்துள்ளதாகவும் கூறினார். அதேபோல் மேற்கண்ட நோட்டினை தான் கைபட எழுதி பராமரித்து வருவதாக தெரிவித்தார். அதேபோல் அனுப்புநர் S.பாலன் ஒப்பந்ததாரர், இளையான்குடி வட்டம், சிவகங்கை மாவட்டம் என பெயரிட்டு RT-6335404721N 13.07.2021, A.தமிழரசன் ஒப்பந்ததாரர் இளையான்குடி (அஞ்சல்), இளையான்குடி (வட்டம்), சிவகங்கை மாவட்டம் என பெயரிட்டு RT-6335405091N 13-07-2021ல் மேற்படி ராஜசேகர் மீது புகார் தெரிவித்து அனுப்பியிருந்த புகார் மனுவிற்கு 29.09.2021 அன்று PA PD அலுவலகத்திற்கு விசாரணைக்காக ஆஜராகி வந்ததாகவும், விசாரணையின் முடிவில் எழுதி வாங்கி அனுப்பி வைத்துவிட்டார்கள் எனவும் தெரிவித்தார். இந்த திடீர் சோதனையின்போது, காக்கி நிற பேக்கில் EE திருமதி.சிவராணி அவர்களுக்கு காண்ட்ராக்டர்களிடம் இருந்து பெற்று வைத்திருந்த மேற்கண்ட கமிஷன் தொகை மொத்தம் ரூ.2,10,000/–, காக்கி நிற பேக், மேற்கண்ட 2 புகார் மனுக்கள், சிவப்பு கலர் Venus Note book ஆகியவை கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது, அலுவலகத்தினுள் இருந்த பெண் அலுவலர்களை சோதனையிடுவதற்காக WPC 1682 திருமதி.சி.சர்மிளா, ஆயுதப்படை, சிவகங்கை மற்றும் WPC 2551 செல்வி.அ.பூமாதேவி, ஆயுதப்படை, சிவகங்கை ஆகியோர் முறைப்படி வரவழைக்கப்பட்டனர். மேற்படி அலுவலகத்தில் Engineering Wing- அறையில் இருந்த திரு.நா.அருணகிரி, இளநிலை வரை தொழில் அலுவலர் என்பவரை சோதனையிட அவரது மணி பர்சினுள் கத்தையாக 18 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் மொத்தம் ரூ.9000/–மும், ஒரு ஐநூறு ரூபாய் நோட்டு தனியாகவும் இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, பாரதி புத்தக திருவிழாவிற்காகவும், தொழில் வரி கட்டுவதற்காகவும், தனது செலவுக்காகவும் வைத்திருந்த பணம் என்று கூறினார். அவர் செலவுக்காக வைத்திருந்ததாக கூறிய பணம் ரூ.500/– அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவர் சரியான முகாந்திரம் கூறாத பணம் ரூ.9000/– அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. Engineering Wing- அறையில் இருந்த திரு.அ.செல்வராஜ், இளநிலைப்பொறியாளர் என்பவரை சோதனையிட அவரது மணி பர்சில் ரூ.740/– இருந்தது. அது குறித்த கேட்ட அவரது கை செலவுக்காக வைத்திருந்த சொந்தப்பணம் என்று கூறியதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேற்படி அறையிலிருந்த திருமதி.K.தேவிகா, உதவிப்பொறியாளர் என்பவரை சோதனையிட அவரது கைப்பையினுள் இருந்த மணி பர்சில் ரூ.520/– இருந்தது. அது குறித்த கேட்ட அவரது பயண செலவு மற்றும் டீ செலவுக்காக வைத்திருந்த சொந்தப்பணம் என்று கூறியதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேற்படி அறையிலிருந்த திரு.K.குமரபிரபு, இளநிலை வரைதொழில் அலுவலகர் என்பவரை சோதனையிட அவரது மணி பர்சில் ரூ.220/– இருந்தது. அது குறித்த கேட்ட அவரது கை செலவுக்காக வைத்திருந்த சொந்தப்பணம் என்று கூறியதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேற்படி அறையில் தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிந்து கொண்டிருந்த திரு.S.முத்துக்கிருஷ்ணன், கணிணி உதவியாளர் என்பவரை சோதனையிட அவரது சட்டைப்பாக்கெட்டில் ரூ.7730/– இருந்தது. அது குறித்து கேட்ட போது LIC-யில் Premium செலுத்துவதற்காக ATM-ல் இருந்து

எடுத்து வைத்திருந்த பணம் என்று கூறியதால், அவரது விளக்கத்தினை சரிபார்த்த பின்னர் அந்தப்பணம் ரூ.7730/– அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேற்படி அறையிலிருந்த திரு.M.பாலமுருகன், உதவியாளர் என்பவரை சோதனையிட அவரது சட்டைப்பாக்கெட்டில் ரூ.1450/– இருந்தது. அது குறித்து அவரிடம் கேட்டபோது அவர் ரூ.950/– மளிகைச்சாமான்கள் வாங்குவதற்காகவும் மற்றும் கைமாற்றாக கொடுத்திருந்ததில் திரும்ப பெற்ற பணம் ரூ.500/– என்று கூறியதால் அந்தப்பணம் ரூ.1450/– அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேற்படி அறையில் தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிந்து கொண்டிருந்த திரு.M.சேவுகப்பெருமாள், கணிணி உதவியாளர் என்பவரை சோதனையிட அவரது சட்டைப்பாக்கெட்டில் ரூ.3450/– இருந்தது. அது குறித்த கேட்ட அவர் உடை வாங்குவதற்காக வைத்திருந்த பணம் என்று கூறியதால் அந்தப்பணம் ரூ.3450/– அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேற்படி அறையிலிருந்த திருமதி.சு.சூர்யகலா, அலுவலக உதவியாளர் என்பவரை சோதனையிட அவரது மணி பர்சில் ரூ.70/– இருந்தது. அது குறித்த அவரிடம் கேட்டபோது, அவர் பஸ் செலவுக்காக வைத்திருந்த பணம் என்று கூறியதால் அந்தப்பணம் ரூ.70/– அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. திடீர்சோதனையின்போது திரு.நா.அருணகிரி, இளநிலை வரை தொழில் அலுவலர் மூலம் தகவல் தெரிந்து, திருமதி.கு.சிவராணி, செயற்பொறியாளர், திட்ட இயக்குநர் (பொ) என்பவர் மேற்படி அலுவலகத்தில் அவரது அறைக்கு வந்தார். அவரை சோதனையிட அவரது கைப்பையினுள் ரூ.2490/– இருந்தது. அந்தப்பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, அவர் கை செலவுக்காக வைத்திருந்த பணம் என்று கூறினார். ஆகவே, மேற்படி பணம் ரூ.2490/– அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது, சிவகங்கை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் பிரிவு வருகைப்பதிவேடு, சிவகங்கை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ரூர்பன் பணியாளர்கள் / மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கணிணி உதவியாளர்கள் வருகைப்பதிவேடு ஆகியவற்றை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது, (1) திருமதி.கு.சிவராணி, செயற்பொறியாளர், திட்ட இயக்குநர (பொறுப்பு), (2) திரு.R.சண்முகசுந்தரம், உதவி செயற்பொறியாளர், (3) திரு.பெ.நீலமேகம், உதவி செயற்பொறியாளர், (4) திரு.நா.அருணகிரி, இளநிலை வரைதொழில் அலுவலர், (5) திரு.கி.ராஜசேகர், கணிணி உதவியாளர் மற்றும் திட்ட இயக்குநருக்கான தனி உதவியாளர், (6) திரு.அ.செல்வராஜ், இளநிலை பொறியாளர், (7) திரு.கி.குமரபிரபு, இளநிலை வரைதொழில் அலுவலர், (8) திருமதி.கா.தேவிகா, உதவிப்பொறியாளர், (9) திரு.மூ.பாலமுருகன், உபகோட்ட உதவியாளர், (10) திரு.சா.முத்துக்கிருஷ்ணன், கணிணி உதவியாளர், (11) திருமதி.சு.சூரியகலா, அலுவலக உதவியாளர், (12) திரு.மீ.சேவுகப்பெருமாள், கணிணி உதவியாளர் ஆகியோரை துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நான் விசாரித்து என் முன்பாக வாக்குமூலங்கள் பெறப்பட்டது. இந்த திடீர் ஆய்வு அறிக்கை குறிப்புகள் 30.09.2021ம் தேதி 22.00 மணிக்கு முடிக்கப்பட்டது. இணை திடீர் சோதனையின்போது கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், சரியாக கணக்கு சொல்ல இயலாத பணம் மொத்தம் ரூ.3,31,000/–, பணம் வைக்கப்பட்டிருந்த காக்கி கலர் போல்டர் பேக் மற்றும் அதில் இருந்த ஆவணங்கள், பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள், இணை திடீர் சோதனை சம்பந்தமான எனது நடவடிக்கை குறிப்பு ஆகியவற்றை இத்துடன் ஒப்படைக்கிறேன்.

இதுசம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, ஒப்பம் (S.பாலகுரு) துணை ஆய்வுக்குழு அலுவலர், சிவகங்கை மாவட்டம். 01.10.2021.

Submitted, Sir, Received this report along with enclosures and I registered a case in Sivagangai Vigilance and Anti-Corruption in Cr.No.08/2021, U/s 7 of Prevention of Corruption Act 1988 (as amended in) Act 16 of 2018 on 01.10.2021 at 07.00 hrs, sd. M.Kumaravel, Inspector of Police, Vigilance and Anti-Corruption, Sivagangai 01.10.2021.

The original F.I.R along with complaint enclosed with Joint Surprise Proceedings, Statements of 1)Tmt.K.Sivarani, 2)Tr.S.Shanmugasundaram, 3)Tr.P.Neelamegam, 4)Tr.N.Arunagiri, 5)Tr.K.Rajasekar, 6)Tr.A.Selvaraj, 7)Tr.K.Kumarapirabhu, 8)Tmt.K.Devika, 9)Tr.M.Balamurugan, 10)Tr.S.Muthukrishnan, 11)Tmt.K.Suriyakala, 12)Tr.M.Sevugaperumal are submitted to the Honourable Special Judge, Special Court for Trial of Cases under the Prevention of Corruption Act, Sivagangai and the copies are submitted to the concerned officers.

ஒப்பம்
(ம. குமாரவேல்)
காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு
சிவகங்கை
01.10.2021.